06.07.2016

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## இன்றைய வேளாண் செய்திகள்

### ஒகேனக்கல்லில் நீர்வரத்து அதிகரிப்பு

ஒகேனக்கல் காவிரி ஆற்றுக்கு வரும் நீர்வரத்து அதிகரித்துள்ளது.

பிரதான அருவியில் மட்டும் சொற்பளவு தண்ணீர் கொட்டியது. இந்த நிலையில், கர்நாடக மாநிலத்தில் உள்ள காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்து வரும் தொடர்மழையால் அங்குள்ள அணைகள் வழியாக, தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல் காவிரி ஆற்றுக்கு தண்ணீர் வருகிறது.

ஒகேனக்கல் ஆற்றில் திங்கள்கிழமை 2,000 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்த நிலையில், செவ்வாய்க்கிழமை சற்று அதிகரித்து, நீர்வரத்து 4000 கன அடியாக அதிகரித்துள்ளது.

### ரம்ஜான்: சத்தியில் இருந்து துபை, சவூதிக்கு 1.5 டன் பூக்கள் ஏற்றுமதி

ரம்ஜான் பண்டிகைக்காக சத்தியமங்கலத்தில் இருந்து பதப்படுத்தப்பட்ட உயர் ரக மல்லிகைப் பூக்கள் துபை, சவூதி அரேபியாவுக்கு செவ்வாய்க்கிழமை அனுப்பப்பட்டன.

சத்தியமங்கலம் வட்டாரத்தில் 60 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் மல்லிகை, முல்லை, கனகாம்பரம், சம்பங்கி உள்ளிட்ட பூக்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. இவற்றில் பூக்கள் தர மல்லிகைப் பூக்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

கோவையைச் சேர்ந்த தனியார் பூ ஏற்றுமதி நிறுவனம் சத்தியில் உயர் தரப் பூக்களை கொள்முதல் செய்து, பல்வேறு நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்து வருகிறது. இதுகுறித்து அந்த நிறுவனத்தினர் கூறியதாவது:

சத்தியமங்கலம் பகுதியில் கொள்முதல் செய்யப்படும் முதல் தர பூக்களை பல்வேறு நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்து வருகிறோம். தற்போது ரம்ஜான் பண்டிகையை முன்னிட்டு கேரள மாநிலம், கொச்சியில் இருந்து விமானம் மூலமாக துபை மற்றும் சவூதி அரேபியாவில் உள்ள ரியாத், ஜெட்டா ஆகிய நகரங்களுக்கு ஏற்றுமதி செய்கிறோம். செவ்வாய்க்கிழமை 1.50 டன் பூக்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன என்றார்.

## திருவட்டாறில் தென்னை விவசாயிகளுக்கு கொப்பரை கொள்முதல் அட்டை

திருவட்டாறு வட்டாரத்தில் தென்னை விவசாயிகளுக்கு கொப்பரை கொள்முதலுக்கான அடையாள அட்டை விநியோகம் செய்யப்படுகிறது.

இது குறித்து வட்டார வேளாண் உதவி இயக்குநர் பி. சுசீலா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

திருவட்டாறு வட்டாரத்தில் தென்னை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு வேளாண்மை கூட்டுறவு விற்பனை சங்கத்தின் மூலம் கொப்பரை தேங்காய் கொள்முதல் செய்வதற்கான அடையாள அட்டை விநியோகம் செய்யப்படுகிறது.

கிராம நிர்வாக அலுவலரிடமிருந்து தென்னை சாகுபடி செய்யப்பட்டதற்கான நடப்பு பசலி, அடங்கல், நிலத்தீர்வை ரசீது, கணினி சிட்டா, பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஆகிய விவரங்களுடன் திருவட்டாறு வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தையோ அல்லது அருகில் உள்ள வேளாண்மை அலுவலரையோ விவசாயிகள் தொடர்பு கொண்டு அடையாள அட்டை கோரி விண்ணப்பிக்கலாம். நடப்பு ஆண்டில் அரவை கொப்பரை ஒரு கிலோ ரூ. 59.50-க்கும், பந்து கொப்பரை ரூ. 62.40-க்கும் கொள்முதல் செய்யப்படவுள்ளது. எனவே, அரசு அறிவித்துள்ள இத்திட்டத்தின் மூலம் பயனடையுமாறு விவசாயிகள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### பயணம் தரும் பாடம்

குற்றாலப் பயணம், நம் முன்னோர்கள் நீர்நிலைகளின் மீது வைத்திருந்த அக்கறையைக் காட்டுகிறது. நம் முன்னோர்கள் நீர் நிலைகளின் பல்வேறு வகைகளுக்கு அழகிய பெயர்களை வைத்துள்ளனர். இவற்றில் பல காரணப் பெயர்களாகவும், சில காரணம் இல்லாமல் இடுகுறிப் பெயர்களாகவும் உள்ளன. நீர்நிலைகளின் பெயர்களை ஒட்டியே ஊர்ப்பெயர்களும் உள்ளன. பலவகைப் பயன்பாட்டுக்குப் பயன்படும் நீர்த்தேக்க வகைக்கு 'இலஞ்சி' என்று பெயர். தென்காசியில் இருந்து செங்கோட்டை செல்லும் பாதையில் குற்றாலத்திற்கு அருகில் இலஞ்சி என்ற பெயரில் ஓர் ஊர் உள்ளது. இங்கு சித்ராநதி ஓடுகிறது. இலஞ்சி, சமையலுக்கு மிகவும் பெயர் பெற்றது.

### சொட்டுநீர் பாசன திட்டம்: பயன்படுத்த அழைப்பு

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், சொட்டு நீர் பாசன திட்டத்தை விவசாயிகள் பயன்படுத்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து, கலெக்டர் கதிரவன் வெளியிட்ட அறிக்கை: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், சொட்டுநீர் பாசன திட்டத்திற்காக, 886 ஹெக்டேரில் வேளாண்மை பயிர்களுக்கும், 2,500 ஹெக்டேரில் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி செய்வதற்காக, கடந்த, 2015-16ம் ஆண்டில், 32 கோடியே, 16 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு, 100 சதவீத மானியத்திலும், மற்ற விவசாயிகளுக்கு, 75 சதவீத மானியத்திலும் சொட்டு நீர் பாசன திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தில் பயன்பெற விரும்பு விவசாயிகள், சம்பந்தப்பட்ட வேளாண் மற்றும் தோட்டக்கலை உதவி இயக்குனர்

அலுவலகங்களை நேரில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## பெனுகொண்டாபுரம் ஏரியின் மதகு சீரமைப்பால் மகிழ்ச்சி

போச்சம்பள்ளி: போச்சம்பள்ளி அடுத்த, மத்தூர் அருகே உள்ள பெனுகொண்டாபுரம் பெரிய ஏரியின் பிரதான கால்வாய் மதகு சீரமைக்கப்பட்டதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி அடுத்த மத்தூர் அருகே உள்ள பெனுகொண்டாபுரம் பெரிய ஏரி, விவசாய பாசனத்திற்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த ஏரியின் பிரதான பாசன கால்வாய், 12 கிலோ மீட்டர் நீளமும், 24 துணை மதகுகளை கொண்டதாக உள்ளது. கடந்த, இரு ஆண்டுக்கு முன், பாசன கால்வாயின் மதகில் பழுது ஏற்பட்டதால், ஏரியில் போதிய தண்ணீரை தேக்கி வைக்க முடியாத நிலை ஏற்பட்டது. இதனால், ஒட்டப்பட்டி, கொடமாண்டப்பட்டி, கவுண்டனூர், வாலிப்பட்டி, அந்தேரிப்பட்டி, எட்டிப்பட்டி ஆகிய பஞ்சாயத்துகளில், கால்வாய் பாசனம் தடைபட்டது. இதையடுத்து, 'பாசன கால்வாய் மதகை சீரமைக்க வேண்டும்' என, பெனுகொண்டாபுரம் பாசன விவசாயிகள் சங்க தலைவர் சவுந்திரராஜன் மற்றும் விவசாயிகள், தொடர்ந்து கோரிக்கை மனுக்களை கொடுத்து வந்தனர். விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, மேல் பெண்ணையாறு வடிநிலக்கோட்ட தர்மபுரி செயற்பொறியாளர் பாலசுப்பிரமணியன் தலைமையில், பெனுகொண்டாபுரம் ஏரி மதகு ஆய்வு செய்யப்பட்டது. ஏரியில், எட்டு அடி உயரத்திற்கு தண்ணீர் இருந்த போதும், மதகை சரி செய்யும் தொழிலாளர்கள் உதவியுடன், பழுது சரி செய்யப்பட்டது. இதனால், இப்பகுதி விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## கால்நடை தடுப்பூசி பயிற்சி முகாம் துவக்கம்

ஈரோடு: கால்நடை தடுப்பூசி போடுனர் பயிற்சி முகாம், தொடங்கியது. தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் மற்றும் கால்நடை பல்கலைக்கழகம் பயிற்சி ஆராய்ச்சி மைய தொலைதூரக் கல்வி சார்பில், கால்நடை தடுப்பூசி போடுனர்களுக்கான, ஒரு மாத பயிற்சி முகாம், ஈரோடு கால்நடை பல்கலை கிளையில் துவங்கியுள்ளது. இதுகுறித்து பயிற்சி மைய தலைவர் யசோதை கூறியதாவது: வேலையற்ற இளைஞர்கள் பயன் பெறும் வகையில், கால்நடை பல்கலைகழகம் பல்வேறு வேலை வாய்ப்பு பயிற்சிகளை அளிக்கிறது. பத்தாம் வகுப்பு முடித்தவர்கள் இதில் சேர முடியும். தற்போது, 20 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர். பயிற்சி முடிந்தவுடன் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் கூடுதல் தகுதியாக பதிவு செய்து கொள்ளலாம். கால்நடை மருத்துவமனைகளில் கறவை மாடு, வெள்ளாடு, செம்மறி ஆடுகளுக்கு, கோமாரி, நீல நாக்கு, துள்ளுமாரி போன்ற நோய்களுக்கு இவர்கள் தடுப்பூசி போடலாம். இவ்வாறு அவர் கூறினார்.

## வின்துகள்கள் : 'செவ்வாயில்' விளைந்த தக்காளி!



செவ்வாய் கிரகத்தின் மண், ஏறக்குறைய ஹவாய் தீவுகளிலுள்ள எரிமலைப் பகுதி மண்ணைப் போல இருக்கும் என்று, 'நாசா' விஞ்ஞானிகள் கருதுகின்றனர். எனவே, நெதர்லாந்தின் வாஜெனின்கென் பல்கலைக்கழக விஞ்ஞானிகள், அதே எரிமலை மண்ணை வைத்து, செவ்வாயில் மனிதர்கள் குடியேறினால் அமைக்கவுள்ள, 'பசுமைக் குடில்'களை அமைத்து சில பயிர்களை வளர்த்தனர்.

முதல் கட்ட சோதனை தோற்றது. இரண்டாம் கட்ட சோதனையில் முள்ளங்கி, தக்காளி, பட்டாணி போன்றவை நல்ல விளைச்சல் கண்டுள்ளன. பொதுமக்களிடமிருந்து திரட்டிய நிதியிலேயே இந்த ஆராய்ச்சி நடக்கிறது. எனவே, மூன்றாவது அறுவடையில், நிதி தந்தவர்களுக்கு, 'செவ்வாய் விருந்து' படைக்க வாஜெனின்கென் பல்கலை கழகத்தை சேர்ந்த விஞ்ஞானிகள் முடிவெடுத்து உள்ளனர்.

## வறண்ட பூமியில் வற்றாத லாபம்

ராமநாதபுரம் அருகே வழுதூரில் இயற்கை விவசாய முறையில் ஒருங்கிணைந்த பண்ணையம் அமைத்து, விவசாயத்துடன் அதை சார்ந்த உப தொழில்களை செய்து வளமான வருமானத்துக்கு வழிகாட்டுகிறார் விவசாயி நந்தகுமார். இவர் வெளிநாட்டு வேலை தேடி வந்தும், அதை உதறினார். இயற்கை விவசாயத்தின் பால் கொண்ட ஈர்ப்பால் வழுதூரில் தனது இரண்டரை ஏக்கர் நிலத்தில் அரசு உதவியுடன் ஒருங்கிணைந்த பண்ணையம் அமைத்துள்ளார். இங்கு ஒரு ஏக்கரில் தென்னை, 50 சென்ட் நிலத்தில் மா சாகுபடி செய்துள்ளார். இவற்றிற்கு இயற்கை உரங்களையே பயன்படுத்துகிறார். தவிர, ஆடு, மாடு, நாட்டுக்கோழி வளர்ப்பு, தேனீ மற்றும் காளான் வளர்ப்பிலும் ஈடுபட்டுள்ளார். பண்ணை குட்டை அமைத்து மீன் வளர்க்கிறார். பந்தல் காய்கறிகள், செடி வகை காய்கறிகள் மற்றும் 7 வகை கீரைகள் சாகுபடி செய்து வறண்ட பூமியில் விவசாயம் மூலம் வற்றாத லாபம் ஈட்டி வருகிறார். நந்தகுமார் கூறியதாவது: பால் காளான் கோடை காலத்திலும், சிப்பி காளான் மழை காலத்திலும் வளரும் தன்மை கொண்டது. காளான் வளர்ப்புக்கு 3 சென்ட் இடம் போதும். காளான் குடில் அமைத்து வளர்க்கலாம். காளான் விதைகளை மாவட்ட மகளிர் திட்ட முகாம் மூலம் பெறப்படுகிறது. 300 கிராம் விதைகளை ரூ.30க்கு வாங்குகிறோம். இதில் ஒன்றரை கிலோ காளான் உற்பத்தி செய்யலாம். குடில் அமைக்க ரூ.75 ஆயிரம் செலவாகும். ரூ.30 ஆயிரம் அரசு மானியம் உண்டு. காளான் கிலோ ரூ.200க்கு விற்பனையாகிறது. தற்போது ஆரம்ப நிலையில் தினமும் 4 கிலோ காளான்

உற்பத்தியாகிறது. சில மாதங்களில் 10 கிலோ வரை உற்பத்தியாகும் என எதிர்பார்க்கிறோம்.
மா, தென்னை, காய்கறி உற்பத்தியை அயல் மகரந்த சேர்க்கை மூலம் அதிகரிப்பதற்காக தோட்டக்கலைத்துறை உதவியுடன் தேனீ வளர்ப்பிலும் ஈடுபட்டுள்ளேன். துறை சார்பில் தேன் கூடு ஈக்களுடன் 20 பெட்டிகள் இலவசமாக தருகின்றனர். இதில் ஆறு மாதங்களில் ஒரு பெட்டியில் 600 கிராம் தேன் வரை எடுக்கலாம். ஒரு கிலோ தேன் ரூ.400க்கு கொடுக்கிறோம். 55 தேன் கூடு பெட்டிகளை பராமரிக்கிறேன்.

மீன் வளர்ப்புக்காக முதன்முறையாக பண்ணை குட்டை அமைத்துள்ளேன். இதில் 1000 பாலை மீன், கட்லா மீன் வளர்க்கிறேன். ஆறு மாதங்களில் மீன்கள் வளர்ந்து விற்பனைக்கு தயாராகும். பாலை மீன் கிலோ ரூ.150. கட்லா ரூ.250 வரை விலை போகும். கட்லா மீன் ஒன்று ஒன்றரை கிலோ எடை, பாலா மீன் 400 கிராம் எடை வரை வளரும். ஒருங்கிணைந்த பண்ணையம் அமைத்ததால் விவசாயத்தில் அதிக லாபம் ஈட்டலாம் என்றார். தொடர்புக்கு 94865 75172.- **எஸ்.பழனிச்சாமி, ராமநாதபுரம்.**

## கொள்ளை லாபம் தரும் கொடி தக்காளி

ஏழைகளின் ஆப்பிள் என்ற பெருமை பெற்றது தக்காளி. நம்மூர் சமையலில் தவிர்க்க முடியாத இடம் பிடித்துள்ள தக்காளி, இத்தாலி நாட்டு 'பீட்சா' உணவிலும் அதிகளவு ஆக்கிரமித்துள்ளது. இதனால் தக்காளிக்கு எப்போதும் மவுசு உண்டு. இதை பயிரிடும் விவசாயிகள் அவ்வப்போது ஏற்படும் விலை வீழ்ச்சியால் கவலைப்பட்டாலும், திடீரென 'ஜாக்பாட்' பரிசும் கிடைத்துவிடும். "கொடித்தக்காளி பயிரிட்டு பணத்தை அள்ளலாம்," என்கிறார் திண்டுக்கல் விவசாயி செல்வராஜ்.
தக்காளியைப் பொறுத்தவரை இங்கு நாட்டு தக்காளி ஒட்டன்சத்திரம், அய்யலூர், வடமதுரை, சாணார்பட்டி, ஏ.வெள்ளோடு உட்பட பல இடங்களில் பயிரிடப்படுகிறது.
இது தரையில் படர்ந்து வளரக்கூடியது. சிறிது மழை பெய்தாலும், வெயில்

அடித்தாலும் தாக்குப் பிடிக்க முடியாமல் அழுகி விடும். இதனால் மழை, வெயில் நேரத்தில் விவசாயிகள் கடும் நஷ்டத்தை சந்திக்க நேரிடுகிறது. இதனை தவிர்க்கும் வகையில், புதிய முறையில் கொடி தக்காளியென பயிரிட்டு சாதனை படைக்கிறார் செல்வராஜ்.

அவர் கூறியதாவது: கொடித் தக்காளி தரையில் வளராது. மழைக்கும், வெயிலுக்கும் தாக்குப் பிடிக்கும். அதிக மகசூல் தரக்கூடியது. பூச்சித் தாக்குதல் குறைவு. தக்காளி விளைந்து பலன் தர மூன்று மாதமாகும். அதன்பின் ஆறு மாதத்திற்கு காய்ப்பு தரும். நாட்டுத் தக்காளி மூன்று மாதம் மட்டுமே காய்ப்பு தரும். மழை பெய்தால் விளைச்சல் அதிகமாக இருக்கும். சில நேரங்களில் இலைச்சுருட்டு புழு, செல் பூச்சிகள் தாக்குதல் இருக்கும். இதற்கு இயற்கையான பூச்சி கொல்லி மருந்து தெளித்தால் போதும். ஒரு ஏக்கருக்கு களை எடுப்பு, நடுதல் கூலி, பந்தல், கொடி கட்டுதல் ஆகியவற்றிற்கு ஏக்கருக்கு ரூ.75 ஆயிரம் செலவாகும். அதேசமயம் ரூ.2 லட்சம் முதல் ரூ.2.25 லட்சம் வரை வருமானம் பெறலாம். விலை கூடும் போது வருமானம் மூன்று மடங்காகவும் வாய்ப்புள்ளது. நஷ்டம் இல்லாமல் லாபத்தை சம்பாதிக்க கொடித் தக்காளியே சிறந்தது. மகசூலைப் பொறுத்து முன் கூட்டியே திருச்சி, தஞ்சாவூர் உட்பட வெளிமாவட்ட வியாபாரிகள் முன்பதிவு செய்வார்கள். கொடித் தக்காளிக்கு எப்போதும் நல்ல மார்க்கெட்டும் உள்ளது, என்றார். தொடர்புக்கு 80989 -90831.

**- எஸ். அரியநாயகம், திண்டுக்கல்.**

## அசத்துவம் அவுரி சாகுபடி ஏற்றுமதிக்கு வாய்ப்பு

மானாவாரி பயிர்களில் அவுரிச் செடியின் இலை, பூ, காய்களுக்கு ஏற்றுமதி வாய்ப்பு அதிகளவில் உள்ளது. மதுரை திருமங்கலம் கரிசல்காலன்பட்டியைச் சேர்ந்த விவசாயி ஜக்கையன் தனது அவுரி அனுபவங்கள் பற்றி கூறியதாவது: 30 ஏக்கரில் சோளம், வரகு, மல்லிகை, நித்யகல்யாணி, அவுரி பயிரிட்டுள்ளேன். 15 ஆண்டுகளாக அவுரி செடி வளர்த்து வருகிறேன். இது மானாவாரி பயிர் என்பதால் தண்ணீர் தேவையில்லை. சட்டி கலப்பையால் உழுது விதைப்போம். புரட்டாசி முன்னும், பின்னும் விதைத்து விட்டால் அப்போது கிடைக்கும்

மழையைக் கொண்டு உயிர் பிடித்து வளரும். மாதத்திற்கு ஒருமழை பெய்தாலும் போதும். தை, மாசியில் முதல் அறுவடை எடுத்து விடலாம். அடுத்தும் மழையிருந்தால் இரண்டாம், மூன்றாம்அறுவடை செய்யலாம். இல்லாவிட்டால் இரண்டாம் அறுவடையுடன் மடக்கி உழுது விடுவோம். அவுரியின் இலை, பூக்கள், காய்கள் எல்லாமே விலை போகும். ஒருமுறை பயிரிட்டால் அதிலிருந்தே விதையைப்பெறலாம். ஒரு கிலோ இலை ரூ.30க்கும், காய்கள் ரூ.50க்கும் விலை போகிறது. திருமங்கலத்தில் மட்டும் 300 ஏக்கரில் அவுரி பயிரிட்டுள்ளனர். மருத்துவ குணம் கொண்ட அவுரி இலை, பூ, காய்கள் தூத்துக்குடிக்கு அனுப்பப்படும். அங்கிருந்து வியாபாரிகள் ஏற்றுமதி செய்கின்றனர், என்றார். தொடர்புக்கு 97895 55894.
**-எம்.எம்.ஜெயலெட்சுமி, மதுரை.**

**பண வளம் தரும் பனை சாகுபடி**

நீர்ச்சுரப்பான் நிலங்களில் பனைகளை நட்டு பல தரப்பு பலன்களை பெறலாம். மிதமான தட்ப வெப்ப வெயில், தேவையான நிலத்தடி நீர் உள்ள பகுதிகளில் குறிப்பாக கண்மாய் கரை ஓரங்களில் இவை உயர்ந்து வளரும். பனை பலன் தர மூன்று ஆண்டுகள் தேவைப்படும். எத்தகைய பருவ சூழ்நிலையிலும் வறட்சியையும் தாங்கி வறியோருக்கு பனை வாழ்வளிக்கின்றன. எவ்வித எதிர்பார்ப்பும் இன்றி குறைந்தபட்சம் 70 ஆண்டுகளை கடந்து பலன் கொடுக்கும் அற்புத தெய்வ மரம் பனை என்று சொல்லலாம். குளிர் மேகங்களை சுயமாக ஈர்த்து மழை வரத்துக்கு பெரிதும் பனை உதவுகிறது. பனை மரத்தின் பூம்பாளையில் இருந்து இறக்கப்படும் பதநீர் நாவிற்கு இனிமை தருகின்றது. பதநீர் அருந்தினால் உடல் வெப்பம், உள் தாகம் தீரும். பனை நுங்குகளை நறுக்கி பதநீருடன் கலந்து அருந்துவது உடலுக்கு வலு சேர்க்கும். இக்கலவையில் கால்சியம், சோடியம், தாது உப்புகள் உள்ளன. பதநீரை பக்குவமாக காய்ச்சி பனங்கருப்பட்டி, பனங்கற்கண்டு, சில்லுக்கருப்பட்டி, பனை வெல்லம், வேம்பார் கருப்பட்டி தயாரிக்கலாம். இவை உடலுக்கு குளிர்ச்சி, புத்துணர்ச்சியை தருகிறது. மேகநோய், ஜன்னி, கபம் உள்ளிட்ட பல்வேறு

நோய்களை நீக்குகிறது.

எழுத்தாணியும், பனை ஓலையும்: பனை வேரில் விளைகின்ற, நார்ச்சத்து மிகுந்த பனங்கிழங்கு நீர்க்கட்டு, மலச்சிக்கல், வயிற்று வலி முதலான பிணிகளை போக்கும். குறும்பனை விதைகளில் இருந்து எடுக்கப்படும் பனை எண்ணெய் (பாமாயில்) சமையலுக்கு உதவுகிறது. பன்னெடும் காலமாக கருமையான வெளித்தோற்றம் கொண்ட பனை மரங்களின் வெளுத்த ஓலைகள் இல்லையெனில் சங்க காலத்தில் எழுத்தாணி கொண்டு இயற்றப்பட்ட அரிய காவிய இலக்கியச் சுவடிகள் இந்த காலத்தில் இல்லாது போயிருக்கும். அந்தப்பழமை காவியங்களை பாழாகாத பனை ஓலைகளின் மூலம் சாதித்த மகிமை பனை மரங்களுக்கே உரித்தாகும்.

வாத நோயை விரட்டும் விசிறி: பனை ஓலை விசிறியை பயன்படுத்தினால் வாத தோஷம், பித்த ஆதிக்கம், கப ரோகம் அகன்று விடும். பனங்கட்டையில் வைரம் பாய்ந்த மற்றும் சோற்று பனங்கட்டை என இரண்டு வகை உண்டு. வைரம் பாய்ந்த கட்டை ஓட்டு கூரை அமைக்கவும் சோற்றுக்கட்டை குடிசை போடுவதற்கும் பயன்படுத்தப்படுகிறது. பட்டி தொட்டிகளில் வாழும் பனை மரம் ஏறும் தொழிலாளிகள் பனை மரத்தை தெய்வமாக கருதி வழிபடும் வழக்கமும் தமிழகத்தில் இன்றளவும் கடைப்பிடிக்கப் படுகிறது. பனை வளர்ப்போம் பண வளம் பெறுவோம். **- முன்னோடி விவசாயி நாகரத்தினம், விருதுநகர்.**

## பசுந்தேயிலைக்கு விலை நிர்ணயம்

மஞ்சூர்: நீலகிரி மாவட்டத்தில் உள்ள, 15 கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில், 25 ஆயிரம் பேர்

அங்கத்தினர்களாக இருந்து வருகின்றனர்.

இவர்கள், தங்களது தேயிலை தோட்டத்தில் பறிக்கும் பசுந்தேயிலையை அந்தந்த தொழிற்சாலைகளுக்கு வினியோகித்து வருகின்றனர்.

இந்நிலையில், 'நடப்பு மாதம் அங்கத்தினர்கள் வினியோகிக்கும் பசுந்தேயிலை கிலோவுக்கு, 15.50 ரூபாய் வழங்க வேண்டும்' என, கூட்டுறவு தொழிற்சாலை நிர்வாகங்களுக்கு சுற்றறிக்கை வந்துள்ளது.

## வயலில் விதைப்பு பணி துவக்கம்

கூடலுார்: கூடலுார் பகுதியில் மழை தொடர்வதால், விதைக்கும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

கூடலுார் பகுதி விவசாயிகள் தேயிலை மட்டுமில்லாமல், நெல், வாழை, காபி விவசாயத்திலும் ஈடுபட்டு வருகின்றனர். இங்கு பருவமழை எதிர்பார்த்த காலத்தில் பெய்யாத காரணத்தால், நெல் விதைப்பில் தாமதம் ஏற்பட்டது. விவசாயிகள் வயல்களில் விதைப்பணியை செய்ய முடியாமல் அவதிப்பட்டனர்.

இந்நிலையில், கடந்த ஒரு வாரமாக இப்பகுதியில் மழை பெய்து வருவதால், வயல்களுக்கு தேவையான தண்ணீர் கிடைத்தது.

இதனால், ஆறுதல் அடைந்த விவசாயிகள், முதல் கட்டமாக, விதை நெல்லை விதைக்கும் பணியை துவக்கி

உள்ளனர்.

விவசாயி ஆனந்தன் கூறுகையில், "கூடலுார் பகுதியில், பருவ மழை காலத்தில், கந்தகாசால், மரநெல், பாரதி, ஐ.ஆர்.20., உமா உள்ளிட்ட நெல் வகைகளை பயிரிட்டு வருகிறோம். ஜூன் மாதம் மூன்றாவது வாரத்தில் விதை நெல்லை விதைத்து, ஆடி மாதத்தில், நெல் நாற்று நடவு பணிகளை துவங்கி விடுவோம்.

"நடப்பு ஆண்டில் துவக்கத்தில் பருவமழை குறைந்ததால், குறித்த நாளில், விதை நெல்லை விதைக்க முடியவில்லை. தற்போது தொடரும் பருவமழை நம்பி விதைப்பு பணியை துவக்கி உள் ளோம்," என்றார்.

## கடலைப்பருப்பு விலை அதிகரிப்பு

திண்டுக்கல், : திண்டுக்கல்லில் வரத்து குறைவால் கடலைப்பருப்பு விலை அதிகரித்து, ஒரு கிலோ ரூ.108 க்கு விற்பனையானது.திண்டுக்கல் மார்க்கெட்டிற்கு தினமும் உள்ளூர், ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களிலிருந்து கடலை, துவரம் பருப்பு விற்பனைக்கு வருகிறது. இதில் 2 டன் கடலைப்பருப்பு விற்பனைக்கு வரும்.

சில மாதமாக பருப்புகளின் விலை ஏறியும், இறங்கியும் இருந்தது. இதில் வரத்து அதிகரித்திருந்த கடலைப் பருப்பு ஒரு கிலோ ரூ.78 வரை விற்பனையானது.

இந்நிலையில், சென்ற மாதம் திடீரென வரத்து குறைவு மற்றும் போக்குவரத்து செலவுகளால் 100 கிலோ மூடை ரூ.7600 ல் இருந்து ரூ.8500 ஆக விலை அதிகரித்தது.

இரண்டே வாரங்களில் மேலும் ரூ.ஆயிரம் அதிகரித்தது. இதனால் கடலைப்பருப்பு மூடை ரூ.9500க்கு விற்றதால், ஒரு கிலோவுக்கு ரூ.85 ல் இருந்து ரூ.95 ஆனது. மீண்டும் அதிகரிப்பு: இதற்கிடையே நேற்று மீண்டும் கடலை பருப்பு விலை அதிகரித்துள்ளது. நேற்று முன்தினம் ஒரு கிலோ ரூ.90 க்கு விற்றநிலையில், நேற்று ரூ.18 அதிகரித்து, கிலோ ரூ.108 ஆனது.

இதே போல், துவரம்பருப்பு ரூ.135,பாசிப்பருப்பு ரூ.130, உருட்டுப்பருப்பு ரூ.170, சுண்டல் ரூ.70, வெள்ளைச்சுண்டல் ரூ.80க்கும் விற்றது. வியாபாரி பாலா கூறுகையில், “வெளி மாநிலங்களில் இருந்து கடலைப்பருப்பு வராததால், விலை அதிகரித்துள்ளது”, என்றார்.

பொரிகடலையும் உயர்வு: திண்டுக்கல் மார்க்கெட்டிற்கு தினமும் ஆயிரம் கிலோ வரை பொரிகடலை விற்பனைக்கு வரும். வரத்து அதிகமுள்ள நாட்களில் பொரிகடலை ஒரு கிலோ ரூ.65 முதல் ரூ.80 வரை விற்கும். நேற்று முன்தினம் கிலோ ரூ.90 க்கு விற்ற பொரிகடலை நேற்று ரூ.130 க்கு விற்றது. இதேபோல கருப்பு மற்றும் வெள்ளை சுண்டல் கிலோ ரூ.80 லிருந்து 100 க்கு விற்றது. வியாபாரி ஒருவர் கூறுகையில்,“வரத்து குறைந்ததே பொரிகடலை, சுண்டல் விலை அதிகரிக்க காரணம்” என்றார்.

## அமராவதி அணையில் தண்ணீர் திறப்பு: கடைமடை பகுதிக்கு சென்று சேருவது சிரமம்

கரூர்: பொதுமக்களின் குடிநீர் தேவைக்காக நேற்று அமராவதி அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டும், அது கடைமடை பகுதிக்கு இந்த தண்ணீர் சென்று சேருமா என்பது கேள்விக்குறியாக உள்ளது.

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை அருகே, அமராவதி அணை, 90 அடி உயரமும், 4,047 மில்லியன் கன அடி நீர் கொண்டதாக அமைந்துள்ளது. இதிலிருந்து பெறப்படும் தண்ணீர் மூலம், திருப்பூர் மற்றும் கரூர் மாவட்ட

விவசாயிகள், 50 ஆயிரம் ஏக்கருக்கு மேல், பருவநிலைக்கு ஏற்ப பயிர் செய்து வருகின்றனர். மேலும், கரூர் மாவட்ட மக்களுக்கு விவசாயத்துடன், குடிநீர் ஆதாரமாகவும் விளங்குகிறது. தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்ததால் அமராவதி நீர்பிடிப்பு பகுதிகளான சின்னாறு, தேனாறு, பாம்பாறு ஆகிய பகுதிகளில் இருந்து தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. தற்போது, அணையின் நீர்மட்டம் 58 அடியாக உள்ளது. இருந்தும், மாவட்டத்தில் கோடந்தூர், கூடலூர் கிழக்கு, மேற்கு, தொக்குப்பட்டி, சின்னதாராபுரம், புஞ்சை, நஞ்சைகாளக்குறிச்சி, அணைப்பாளையம், தும்பிவாடி, விஸ்வநாதபுரி, அரவக்குறிச்சி மற்றும் கரூர் பஞ்சாயத்து யூனியன்களில் தற்போது கடும் வறட்சி நிலவுகிறது. இந்நிலையில், நேற்று முதல் வரும், 11ம் தேதி வரை விநாடிக்கு, 2,000 கன அடி நீர் குடிநீருக்காக திறந்து விடப்பட்டது.

இதுகுறித்து காளம்பாளையம் ஏரி மற்றும் அமராவதி நதிநீர் பாசன பாதுகாப்பு இயக்க தலைவர் ராமசாமி கூறியதாவது: கரூர் மாவட்ட மக்களின் தாகம் தீர்க்க அமராவதி அணையில் தண்ணீர் திறப்பது வரவேற்கத்தக்கது. அதே நேரத்தில், இந்த தண்ணீர் கடைமடை வரை வந்து சேருமா என்பதில் தான் சிக்கல் உள்ளது. ஏனென்றால், ஆங்காங்கே அமராவதி ஆற்றோரம் ஆக்ரமிப்பு ஒரு புறம் என்றாலும், முட்புதர்கள் மண்டிக் கிடக்கிறது. ஏற்கனவே, காக்கடைக் கழிவுகளாலும், சாயப்பட்டறை கழிவுகளாலும் அமராவதி ஆறு மாசடைந்து கிடக்கிறது. கரூர் நகருக்குள் தண்ணீர் வந்தால் மட்டுமே நிலத்தடி நீர்மட்டம் உயர வாய்ப்புள்ளது. இந்த தண்ணீர் வருவதால் விவசாயத்துக்கு பெரிய அளவில் பயனில்லை. அமராவதி ஆற்றோரம் ஆழ்குழாய் மூலம் பம்ப் செட் அமைத்து தண்ணீரை உறிஞ்சி வருகின்றனர். உள்ளாட்சி நிர்வாகத்துக்கு அதிகாரம் அளித்து தண்ணீர் உறிஞ்சுவதை தடுத்து நிறுத்தினால், தற்போது வரும் குடிநீருக்கு மட்டுமல்ல; விவசாயத்துக்கும் உறுதுணையாக இருக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

## சூரியகாந்தி சாகுபடி பரப்பு: மழையின்றி குறைந்தது

கிருஷ்ணராயபுரம்: பழையஜெயங்கொண்டம் பகுதியில் விளைந்துள்ள சூரியகாந்தி சாகுபடியானது போதிய மழை இல்லாததால் விளைச்சல் குறைந்துள்ளது.

கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் அடுத்த, மகாதானபுரம் தெற்கு மற்றும் பழையஜெயங்கொண்டம், புதுப்பட்டி, லச்சுமணப்பட்டி, சேங்கல் போன்ற பகுதியில், தற்பொழுது சூரியகாந்தி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதற்கு தேவையான பருவ மழை பெய்யாததால், தண்ணீரின்றி சாகுபடி பரப்பு குறைந்து, விளைச்சல் சரிந்துள்ளது. இதனால், விவசாயிகள் பாதிப்பு அடைந்துள்ளனார்.

இதுகுறித்து, பழையஜெயங்கொண்டம் விவசாயி வெங்கடச்சலம் கூறியதாவது: என்னுடைய நிலத்தில், இரண்டு ஏக்கர் அளவில் மட்டுமே சூரியகாந்தி சாகுபடி செய்யப்பட்து. போதிய மழை இல்லாததால், சூரியகாந்தி மகசூல் குறைந்துள்ளது. மேலும், ஒரு ஏக்கர் சாகுபடி செய்ய, 20 ஆயிரம் ரூபாய் வரை செலவாகிறது. தற்பொது கிலோ, 40 ருபாய் வரை கரூர் மார்க்கெட்டில் விற்பனை செய்கிறோம். இருந்தும், நல்ல விளைச்சல் இல்லாததால் போதிய வருவாய் கிடைக்கவில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

## மாவட்டத்தில் 3,375 டன் உரம் இருப்பு

கரூர்: கரூர் மாவட்டத்தில், யூரியா, டிஏபி, பொட்டாஷ், கலப்பு உரங்கள் என மொத்தம், 3,375 டன் இருப்பு உள்ளது.

இதுகுறித்து, கலெக்டர் காகர்லா உஷா வெளியிட்ட அறிக்கை: கரூர் மாவட்டத்தின் ஆண்டுச் சராசரி மழையளவு, 652.20 மி.மீ., இதில், ஜூன் மாதம் முடிய, 155.64 மி.மீ., (சராசரி 155.3 மி.மீ.,க்கு) மழை கிடைக்கப் பெற்றுள்ளது. இதையடுத்து விவசாயிகள் கோடை உழவு செய்துள்ளனர். நடப்பாண்டில், 1.50 லட்சம் மெ.டன் உணவு தானிய உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அனைத்து வேளாண் விரிவாக்க மையங்களிலும் சான்று பெற்ற நெல் ரக விதைகள்

மொத்தம், 163 மெ.டன் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்ட நெல் இயக்கத்தின் மூலம், சில ரக நெல் விதைகள் கிலோ ஒன்றுக்கு, 10 ரூபாய் மானியத்தில் விவசாயிகளுக்கு வினியோகிக்கப்படுகிறது. மேலும், பயறுவகை விதைகளான துவரை மற்றும் உளுந்து ஆகிய சான்று பெற்ற பயறு விதைகள் மொத்தம், 13.9 மெ.டன் தேசிய உணவுப் பாதுகாப்பு இயக்கம், பயறுவகை திட்டத்தில், ஒரு கிலோவுக்கு, 25 ரூபாய் மானியத்தில் வினியோகிக்கப்பட உள்ளது. நிலக்கடலை விதைகள், 20.5 மெ.டன் இருப்பில் உள்ளது. தேசிய எண்ணெய் வித்துகள் இயக்கத் திட்டத்தில், 15 ஆண்டுக்கு உட்பட்ட ரகங்கள் கிலோ ஒன்றுக்கு, 25 ரூபாய் மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படும். மாவட்டத்தில் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கம் மற்றும் தனியார் கடைகள் மூலம் யூரியா, 1,194 டன், டி.ஏ.பி., 542 டன், பொட்டாஷ், 753 டன், கலப்பு உரம், 886 டன் என, 3,375 டன் உரம் இருப்பு உள்ளது. இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## ரம்ஜான் பண்டிகை முன்னிட்டு பூக்கள் விலை திடீர் உயர்வு

கரூர்: கரூரில், ரம்ஜான் பண்டிகையையொட்டி, பூக்களின் விலை உயர்ந்துள்ளது.கரூர் ரயில்வே ஸ்டேஷன் அருகே உள்ள கரூர் மாரியம்மன் பூ மார்க்கெட்டுக்கு, கரூர் மாவட்டம் வெள்ளியணை, மாயனூர், சேங்கல், அய்யர்மலை, குளித்தலை, கடவூர், பஞ்சப்பட்டி, காணியாளம்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து, முல்லை பூ, மல்லிகை, கோழிக்கொண்டை, செவ்வந்திப்பூ, மருவு உள்ளிட்ட பூக்கள் விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது. கடந்த, மே, ஜூன் மாதங்களில், திருமணம் உள்ளிட்ட விசேஷ நாட்களையொட்டி, பூக்கள் விலை ஏறுமுகத்தில் இருந்தது. குறிப்பாக, ஒரு கிலோ மல்லிகை பூ, 1,000 ரூபாய் வரை விற்றது. பிறகு பூக்கள் விலை படிப்படியாக குறைய துவங்கியது. தற்போது, ரம்ஜான் பண்டிகையையொட்டி, மல்லிகை பூ ஒரு கிலோ, 200 ரூபாயில் இருந்து, 250 ரூபாயாகவும், முல்லை பூ, 200 ரூபாயில் இருந்து, 300 ரூபாய்க்கும், கனகாம்பரம், 300 ரூபாயில் இருந்து, 500 ரூபாய்க்கும், அரளி பூ, 30 ரூபாயில் இருந்து, 70 ரூபாய்க்கும் விலை அதிகரித்துள்ளது. இதுகுறித்து, பூ மார்க்கெட் சங்க

செயலாளர் மோகன்ராஜ் கூறுகையில், "கடந்த சில நாட்களாக ஆங்காங்கே பெய்து வரும் தொடர் மழையினால் பூக்கள் வரத்து அதிகமாக உள்ளது. தற்போது, ரம்ஜான் பண்டிகையால், பூக்கள் விலை சற்று உயர்ந்துள்ளது," என்றார்.

## மேட்டூர் அணை நீர்வரத்து 4,000 கனஅடியாக அதிகரிப்பு

மேட்டூர்: கர்நாடகா அணைகளில் திறக்கப்பட்ட நீர் வந்தடைந்ததால், நேற்று, மேட்டூர் அணை நீர்வரத்து வினாடிக்கு, 4,000 கனஅடியாக அதிகரித்தது. காவிரி நீர்பிடிப்பு பகுதியில் தீவிரம் அடைந்த தென்மேற்கு பருவமழையால், கர்நாடகாவின் கபினி, கே.ஆர்.எஸ்., அணைகளின் நீர்வரத்து அதிகரித்தது. கடந்த, 2 ம் தேதி இரு அணைகளில் இருந்தும் வினாடிக்கு, 4,400 கனஅடி நீர் காவிரியாற்றில் திறக்கப்பட்டது. இந்த நீரின் ஒருபகுதி வந்தடைந்ததால் நேற்று முன்தினம் வினாடிக்கு, 1,998 கனஅடியாக இருந்த, மேட்டூர் அணை நீர்மட்டம் நேற்று, 4,000 கனஅடியாக அதிகரித்தது. கூடுதல் நீர்வரத்தால் நேற்று முன்தினம், 42.56 அடியாக இருந்த நீர்மட்டம், நேற்று, 42.94 அடியாக உயர்ந்தது. குடிநீருக்காக, 1,500 கனஅடி நீர் திறக்கப்பட்டது.

## மேட்டூர், பவானிசாகர் அணைகளில் நீர்வரத்து அதிகரிப்பு



மேட்டூர் : மேட்டூர் மற்றும் பவானிசாகர் அணைகளின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருவதால், அணைக்கு வரும் நீரின் அளவு அதிகரித்து வருகிறது.

மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு 5011 கனஅடியாக அதிகரித்துள்ளது. இதன் காரணமாக அணையின் நீர்மட்டம் 43.44 அடியாகவும், அணையின் நீர்இருப்பு 13,930 டிஎம்சி.,யாகவும் உள்ளது. அணையில் இருந்து விநாடிக்கு 1750 கனஅடி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

இதே போன்று பவானி சாகர் அணைக்கு விநாடிக்கு 1400 கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையின் நீர்மட்டம் 51.65 அடியாகவும், நீர் இருப்பு 4.8 டிஎம்சி.,யாகவும், நீர்வெளியேற்றம் 105 கனஅடியாகவும் உள்ளது.

## ரூ.30 லட்சத்துக்கு மஞ்சள் வர்த்தகம்: விலை சரிவு; வரத்தும் குறைந்தது

நாமகிரிப்பேட்டை: நாமகிரிப்பேட்டையில், 30 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் வர்தத்கம் நடந்தது. மூட்டைக்கு, 1,200 ரூபாய் வரை விலை குறைந்ததால், விவசாயிகள் கவலையடைந்தனர்.
நாமக்கல் மாவட்டம், நாமகிரிப்பேட்டை ஆர்.சி.எம்.எஸ்.,சில் நேற்று மஞ்சள் ஏலம் நடந்தது. இதில், விரலி ரகம் அதிகபட்சம், 100 கிலோ மூட்டை, 9,519 ரூபாய், குறைந்தபட்சம், 7,666 ரூபாய்க்கு விலை போனது, உருண்டை ரகம் அதிகபட்சம், 8,519 ரூபாய், குறைந்தபட்சம், 7,092 ரூபாய்க்கு விற்பனையானது. பனங்காலி ரகம் அதிகபட்சம், 18 ஆயிரத்து,615 ரூபாய், குறைந்தபட்சம், 14 ஆயிரத்து, 415 ரூபாய்க்கு ஏலம் போனது. விரலி, 330 மூட்டைகளும், உருண்டை, 150, பனங்காலி, 30 என மொத்தம், 510 மூட்டைகளும், 30 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போயின. இரண்டு வாரங்களுக்கு முன், 1,320 மஞ்சள் மூட்டைகள் விற்பனைக்கு வந்தன. கடந்த வாரம், 640 மூட்டைகளும், இந்த வாரம், 510 மூட்டைகள் என, வரத்து குறைந்து வருகிறது. கடந்த வாரம் அதிகபட்சம், 10 ஆயிரத்து, 721 ரூபாய்க்கு விற்ற விரலி மஞ்சள் இந்த வாரம், 9,519 ரூபாய்க்கு விற்பனையானது. மூட்டைக்கு, 1,200 ரூபாய் வரை விலை குறைந்திருந்தது. இதனால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

**மானிய திட்டத்துக்கு அமைச்சரவை ஒப்புதல் : விவசாயிகளுக்கு 7% வட்டியில் குறுகிய கால பயிர்க்கடன்**



புதுடெல்லி: விவசாயிகள் நடப்பு நிதியாண்டில் ரூ.3 லட்சம் வரை 7 சதவீத வட்டியில் குறுகிய கால பயிர்க்கடன் பெற்றுக்கொள்ளலாம். விவசாயிகள் குறுகிய கால பயிர்க்கடனாக ரூ.3 லட்சம் வரை பெறலாம். ஓராண்டுக்குள் இதை திருப்பி செலுத்த வேண்டும். இவர்களுக்கு வட்டி மானியமாக 2 சதவீதம் வழங்கவதற்கான வட்டி மானிய திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை நேற்று ஒப்புதல் அளித்தது. இதன்படி இந்த கடனுக்கான வட்டியாக 7 சதவீதம் மட்டும் விவசாயிகளிடம் வசூலிக்கப்படும்.

அதுமட்டுமின்றி, குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் கடனை திருப்பி செலுத்தும்

விவசாயிகளுக்கு வட்டி மானிய சலுகையாக கூடுதலாக 3 சதவீதம் தள்ளுபடி செய்யப்படும். இதற்கும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. எனவே, குறித்த காலத்தில் கடனை திருப்பி செலுத்தும் விவசாயி 4 சதவீதம் மட்டுமே வட்டியாக வழங்க வேண்டியிருக்கும். 5 சதவீதம் தள்ளுபடியாகிவிடும். அமைச்சரவை கூட்டத்துக்கு பிறகு நிருபர்களிடம் பேட்டியளித்த மத்திய தொலைத்தொடர்பு அமைச்சர் ரவிசங்கர் பிரசாத், ''வட்டி மானிய திட்டம் அனைத்து விவசாயிகளுக்கும் பொருந்தும்'' என்றார்.

**யூரியா அல்லாத உரம் விலை டன்னுக்கு ரூ.5,000 வரை சரிவு**



புதுடெல்லி: டிஏபி உட்பட யூரியா அல்லாத உரங்கள் விலை டன்னுக்கு 5,000 ரூபாய் வரை குறைந்துள்ளது. சில்லரை விற்பனையில் டிஏபி எனப்படும் டை அமோனியம் பாஸ்பேட் டன்னுக்கு ரூ.2,500 குறைந்து ரூ.22,000 ஆக உள்ளது. பொட்டாஷ் டன்னுக்கு ரூ.5,000 குறைந்து ரூ.11,000ஆகவும், கூட்டு உரம் டன்னுக்கு ஆயிரம் ரூபாயும் குறைந்துள்ளது என மத்திய அரசு தெரிவித்துள்ளது. இதுபோல் 50 கிலோ கொண்ட உர மூட்டை 150 ரூபாயும், பொட்டாஷ் 250 ரூபாயும் குறைந்துள்ளது.

இந்த விலை சரிவு காரணமாக மொத்தம் ரூ.4,500 கோடி பலன் விவசாயிகளுக்கு கிடைக்கும் யூரியா அல்லாத உரங்கள் விலை கடந்த 15 ஆண்டுகளில் முதல்

முறையாக சரிந்துள்ளது. உள்நாட்டில் டிஏபி உர தேவை 100 லட்சம் டன்களாகவும், கூட்டு உரம் 25 லட்சம் டன்களாகவும், என்பிகே உரங்கள் 90 லட்சம் டன்களாகவும் உள்ளது.

## வனத்துறையின் நாற்றங்கால் பண்ணையில் நடவுக்கு தயார் நிலையில் 1.10 லட்சம் மரக்கன்றுகள்

தர்மபுரி : தர்மபுரி வனத்துறை சார்பில் நாற்றங்கால் பண்ணையில், 1.10 லட்சம் மரக்கன்றுகள் நடவுக்கு தயார் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு உயிர்ப்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் திட்டத்தின் கீழ், தர்மபுரி மாவட்ட வனத்துறை சார்பில் நாற்றங்கால்கள் அமைக்கப்பட்டு மரக்கன்றுகள் வளர்க்கப்படுகிறது. பாலஜங்கமனஅள்ளி, தொப்பூர் உள்ளிட்ட பல இடங்களில் நாற்றங்காலில் மரக்கன்றுகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. இந்த மரக்கன்றுகளை பட்டா நிலம் உள்ள விவசாயிகளுக்கு வனத்துறையினர் இலவசமாக வழங்க உள்ளனர்.

விவசாயிகள் தங்களது நிலத்தின் கணினி பட்டா நகல், ரேஷன் அட்டை நகல் உள்ளிட்ட ஆவணங்களை சமர்ப்பித்தால், மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்படும். பாலஜங்கமனஅள்ளி ஊராட்சிக்கு உட்பட்ட ஆத்துக்கொட்டாயில், 5 மாதத்திற்கு முன் நாற்றங்கால் அமைக்கப்பட்டது. இந்த நாற்றங்காலில் தற்போது 1.10லட்சம் மரக்கன்றுகள் நடவுக்கு தயாராக உள்ளது. தேக்கு, மலைவேம்பு, பீநாரி, சில்வர் ஓக், பூவரசு, புளியன், நெல்லி, பாதாம், பரம்பை, வேம்பு, குமிழ் தேக்கு, மயில்கொண்டை உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் இந்த நாற்றங்காலில் வளர்க்கப்பட்டுள்ளன. இன்னும் ஒரு வாரத்தில் நாற்றுகள் விநியோகம் செய்யப்பட உள்ளது. மரக்கன்றுகள் வளர்க்க ஆர்வம் உள்ள விவசாயிகள், உரிய ஆவணங்களை செலுத்தி மரக்கன்றுகளை பெற்று செல்லலாம் என வனத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

## கரூர் மாவட்டத்திலும் மானிய விலையில் பசுந்தீவனம்

கரூர் : மற்ற மாவட்டங்களை போல கரூர் மாவட்டத்திலும் பசுந்தீவனங்களை மானிய விலையில் வழங்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். கரூர் மாவட்டத்தில் கடந்த ஆண்டு அதிக அளவு மழை பெய்தது. எனினும் எதிர்பார்த்த அளவுக்கு கோடை மழை பெய்யவில்லை. மேலும் பருவமழையும் இதுவரை தொடங்கவில்லை. அவ்வப்போது லேசான தூறல் மட்டுமே விழுகிறது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் காவிரி டெல்டா பகுதி விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்கப்பட்டது.

அமராவதி பாசனம் உள்ளிட்ட அனைத்து விசாயிகளுக்கும் வழங்கவேண்டும் என கோரி வந்தனர். ஆனால் கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை. தண்ணீர் பற்றாக்குறையால் மாட்டுத்தீவன பயிர் சாகுபடி குறைந்துவிட்டது. இதனால் கால்நடை வளர்ப்போர் தீவனத்திற்கு கூடுதல் செலவு செய்ய வேண்டியதிருக்கிறது. தீவனப்பயிர் உற்பத்தி திட்டம் அறிவிக்கப்பட்டது. இந்த திட்டத்தை அனைத்து பகுதிக்கும் செயல்படுத்த வேண்டும் என கால்நடை வளர்ப்போர் கோரி வருகின்றனர். தற்போது புல்கட்டுகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. கால்நடை வளர்ப்போருக்கு பசுந்தீவனம், காய்ந்த தீவனம் என பிறபகுதிகளில் குறைந்த விலைக்கு வழங்கப்படுகிறது.

பசுந்தீவனமாக இருந்தால் கிலோ ரூ.2 எனவும், காய்ந்த தீவனமாக இருந்தால் கிலோ ரூ.10 என்ற மானிய விலையிலும் கொடுக்கின்றனர். இந்த விலை அல்லது அந்தந்த பகுதி சந்தை நிலவரப்படி அருகேயுள்ள பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக கொள்முதல் செய்து கால்நடை வளர்ப்போருக்கு வழங்குகின்றனர். கரூர் மாவட்ட விவசாயிகளுக்கும் இத்திட்டத்தை செயல்படுத்த விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், அமராவதி பாசன பகுதியில் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. கால்நடை தீவன வளர்ப்புக்குக்கூட நீர்பற்றாக்குறையாக

இருக்கிறது. கிணற்றுநீர் பாசன பகுதிகளிலும் பசுந்தீவன உற்பத்தியில்லை. எனவே பிற மாவட்டங்களைப் போல கரூர் மாவட்டத்திலும் பசுந்தீவனம் மானிய விலையில் வழங்க வேண்டும்.

கிராமப்பகுதிகளில் கால்நடைகளை மேய்ச்சல் நிலங்களுக்கு கொண்டு செல்கின்றனர். கரூர் நகரை ஒட்டியுள்ள பகுதிகள், நகரை ஒட்டியிருக்கும் பஞ்சாயத்து பகுதிகளில் இதற்கான வாய்ப்பில்லை என்பதால் தீவனம் விலை அதிகம் அல்லது போதுமான அளவு கிடைப்பதில்லை. நியாயமான விலையில் தீவனம் கிடைக்க செய்ய வேண்டும் என்றனர்.

## திருச்சி மாவட்டத்தில் இயற்கை முறை வேளாண் சாகுபடி பயனாளிகள் தேர்வு மும்முரம்

திருச்சி : திருச்சி மாவட்டத்தில் இயற்கை விவசாய முறையில் எலுமிச்சை, மா சாகுபடியை ஊக்குவிக்க பயனாளிகள் தேர்வு நடைபெற்று வருகிறது. திருச்சி மாவட்டத்தில் காய்கறி பயிர்கள் 8,949 எக்ேடர் பரப்பிலும், பழப்பயிர்கள் 8,535 எக்ேடர் பரப்பிலும், நறுமணப்பயிர்கள் 1,655 எக்ேடர் பரப்பிலும், மலர்செடிகள் 588 எக்ேடர் பரப்பிலும் பயிரிடப்பட்டுள்ளது. வரும் பருவத்தில் தோட்டக்கலை பயிர்கள் அதிகமாக பயிரிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பெருநகர காய்கறிக்குழு வளர்ச்சி திட்டத்தின் கீழ், விவசாய குழுக்கள் அமைத்தல் பணி நடைபெற்று வருகிறது. மேலும் இத்திட்டத்தின் கீழ் உயர் விளைச்சல் ரக காய்கறி உற்பத்தி செய்ய 224 எக்ேடருக்கு பெறப்பட்ட இலக்கு இந்நிதியாண்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நடப்பு நிதியாண்டு 2016-17ம் ஆண்டில் தேசிய தோட்டக்கலை இயக்க திட்டத்தின் கீழ் பழமர செடிகள், பூச்செடிகள் மற்றும் நறுமண பயிர்கள் சாகுபடி செய்வதற்கும், நிலப்போர்வை, சிப்பம் கட்டும் அறை, பசுமை குடில் அமைத்தல் மற்றும் நிழல் வலை கூடாரம் அமைப்பதற்கும் ரூ.1.90லட்சத்திற்கு உத்தேச இலக்குகள் பெறப்பட்டுள்ளது.

தேசிய நுண்ணீர் பாசனத் திட்டத்தில் தோட்டக்கலை பயிர்களுக்கு 927

எக்ேடருக்கு இலக்கு 2015-16ம் ஆண்டு பெறப்பட்டு, நுண்ணீர் பாசன திட்டம் அமைக்கப்பட்டு வருகிறது. தேவைப்படும் விவசாயிகள் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனரை அணுகி பதிவு செய்து கொள்ள தொடர்ந்து பணிகள் நடை பெற்று வருகிறது.

இது குறித்து தோட்டக்கலை துறை அதிகாரிகள் கூறுகையில், பாரம்பரிய வேளாண் உற்பத்தி திட்டத்தின் கீழ், திருச்சி மாவட்டத்தில் துறையூர் மற்றும் மருங்காபுரி வட்டாரங்களில் இயற்கை விவசாய முறையில் எலுமிச்சை மற்றும் மா சாகு படியை ஊக்குவிக்க ரூ.7லட்சத்திற்கு இலக்குகள் பெறப்பட்டு பயனாளிகள் தேர்வு செய்யப் பட்டு பணிகள் மும்முரமாக நடை பெற்று வருகிறது.

மாடித்தோட்டம் அமைப்பதற்கான 3ஆயிரம் தளைகள் பெறப்பட்டு மன்னார்புரம் தோட் டக்கலை துணை இயக்குனர் அலுவலகத்தில் விநியோகம் செய்யும் பணிகளும் நடை பெற்று வருகிறது. தோட்டக்கலை சார்ந்த திட்டங்களை பெற விவசாயிகள் அனைவரும் அருகில் உள்ள வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர்களை அணுகி பயன் பெறலாம். இவ்வாறு அவர் கூறினார்.

## சிவகாமிபுரம் மார்க்கெட்டில் பூக்கள் விலை கிடுகிடு உயர்வு மல்லி கிலோ ரூ.500க்கு விற்பனை

பாவூர்சத்திரம் : சிவகாமிபுரம் மார்க்கெட்டில் பூக்கள் விலை கிடுகிடுவென உயர்ந்தது. ஒரு கிலோ மல்லி ரூ.500க்கு விற்பனையானது. பாவூர்சத்திரம் அருகே உள்ள சிவகாமிபுரம், பூ மார்க்கெட்டிற்கு பிரசித்திப்பெற்றது. இங்கு சிவகாமிபுரம், வடக்கு சிவகாமிபுரம், கீழப்பாவூர், மேலப்பாவூர், மகிழ், நாகல்குளம், பெத்தநாடார்பட்டி, சாலைப்புதூர், அடைக்கலப்பட்டணம், கழநீர்குளம், பட்டமுடையார்புரம், ஆண்டிப்பட்டி, கரும்புளியூத்து, வள்ளியம்மாள்புரம், கோவிலூற்று, பூலாங்குளம், தெற்குமடத்தூர், வடக்குமடத்தூர், மயிலப்புரம், புங்கம்பட்டி, வெங்கடாம்பட்டி, வடமலைப்பட்டி, ஆவுடையானூர், ஆரியங்காவூர், செட்டியூர், கல்லூரணி, மடத்தூர் மற்றும் குலசேகரப்பட்டியை சேர்ந்த விவசாயிகள் மல்லி, பிச்சி, கனகாம்பரம், சம்மங்கி,

மஞ்சள் கேந்தி, துளசி, ரோஜா, முல்லைப்பூ, அரளி போன்ற பூக்களை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர்.

இந்த மார்க்கெட்டில் இருந்து நெல்லை, சங்கரன்கோவில், தென்காசி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த வியாபாரிகளும், கேரளாவை சேர்ந்தவர்களும் பூக்களை ஏலம் எடுத்து வியாபாரத்துக்கு வாங்கி செல்கின்றனர். கடந்த சில நாட்களாக பூக்களின் விலை குறைவாக இருந்தது, இந்நிலையில் நேற்று வரத்து குறைவாலும், ரம்ஜான் பண்டிகையை முன்னிட்டும் பூக்களின் விலை கிடுகிடுவென உயர்ந்தது. கடந்த சில தினங்களுக்கு முன்பு ரூ.70க்கு விற்கப்பட்ட ஒரு கிலோ மல்லி, நேற்று ரூ.500க்கு விற்கப்பட்டது.

ரூ.30க்கு விற்ற சம்மங்கி ரூ.100க்கும், ரூ.250க்கு விற்ற பிச்சிப்பூ ரூ.600க்கும், ரூ.200க்கு விற்ற முல்லை ரூ.500க்கும், ரூ.20க்கு விற்ற கனகாம்பரம் ரூ.60க்கும் விற்பனையானது. கேந்திப்பூ விலையில் மட்டும் மாற்றம் இல்லாமல் கிலோ ரூ.30க்கு விற்பனையாகிறது. பூக்களின் விலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

## தோவாளை மார்க்கெட்டில் பிச்சி பூ மேலும் விலை ரூ.850 உயர்வு ஒரு கிலோ ரூ.1100–க்கு விற்பனை



தோவாளை பூ மார்க்கெட்டில் நேற்று பிச்சி பூ விலை மேலும் ரூ.850 உயர்ந்தது. இதனால் ஒரு கிலோ ரூ.1100–க்கு விற்பனை செய்யப்பட்டது.

பூ மார்க்கெட்

நாகர்கோவில் அருகே உள்ள தோவாளையில் பூ மார்க்கெட் உள்ளது. இங்கு தினமும் குமரி, நெல்லை, மதுரை உள்பட பல இடங்களில் இருந்து பூக்களை விற்பனை செய்வதற்காக விவசாயிகள் கொண்டுவருகிறார்கள். பூக்கள் சில்லறையாகவும், மொத்தமாகவும் விற்பனை செய்யப்படும்.

பூக்களை மார்க்கெட்டிற்கு கொண்டுவருவதற்காக டெம்போ, மினிடெம்போ, பஸ், மோட்டார் சைக்கிள் உள்பட வாகனங்களை விவசாயிகள் பயன்படுத்துகிறார்கள். தினமும் அதிகாலையிலேயே மார்க்கெட்டிற்கு பூக்கள் விற்பனைக்கு வருவது வழக்கம். அப்போதே வியாபாரிகள் வந்துவிடுவதால் விற்பனையும் நடைபெற தொடங்கிவிடும்.

பிச்சி விலை உயர்வு

இந்நிலையில் நேற்று முன்தினம் ஒரு கிலோ ரூ.250–க்கு விற்பனை செய்யப்பட்ட பிச்சி பூ, நேற்று மேலும் விலை ரூ.850 உயர்ந்தது. இதனால் ஒரு கிலோ ரூ.1100–க்கு விற்பனை செய்யப்பட்டது. பிச்சி பூவின் விலை உயர்வு குறித்து பூ வியாபாரி விஸ்வநாதன் கூறுகையில் “ நாளை (இன்று) புதன்கிழமை ரம்ஜான் பண்டிகை என்பதாலும், முகூர்த்த தினம் என்பதாலும் பிச்சி பூக்களின் தேவை அதிகமாக இருந்தது. இதனால் பிச்சி பூக்கள் மார்க்கெட்டிற்கு வர வர வியாபாரிகள் போட்டி போட்டு ஏலம் எடுத்தனர். இதனால் தான் விலை உயர்ந்தது“ என்று கூறினார்.

ஒரு கிலோவிற்கு

மேலும், மற்ற பூக்களின் விலையும் உயர்ந்தது. அவற்றின் விவரம் ஒரு கிலோவிற்கு வருமாறு:– முல்லை ரூ.800–க்கும், கனகாம்பரம் ரூ.400–க்கும், மல்லிகை ரூ.350–க்கும், சம்பங்கி ரூ.150–க்கும், வெள்ளை சிவந்தி ரூ.150–க்கும், ஸ்டெம்புரோஸ் ரூ.120–க்கும், சிவந்தி ரூ.120–க்கும், மருக்கொழுந்து ரூ.100–க்கும், பட்டன்ரோஸ் ரூ.70–க்கும், கொழுந்து ரூ.60–க்கும், அரளி ரூ.50–க்கும், கேந்தி ரூ.50–க்கும், மஞ்சள்கேந்தி ரூ.50–க்கும், மாம்பழ கேந்தி ரூ.40–க்கும், வாடாமல்லி ரூ.30–க்கும், கோழிப்பூ ரூ.30–க்கும், துளசி ரூ.15–க்கும், பச்சை ரூ.5–க்கும், தாமரை (100 எண்ணம்) ரூ.300–க்கும், ரோஜா (100 எண்ணம்) ரூ.20–க்கும் விற்பனை செய்யப்பட்டது.

**நீலகிரி மாவட்ட விவசாயிகள் தோட்டக்கலைதுறை மூலம் வழங்கப்படும் சலுகைகளை பெற விண்ணப்பிக்கலாம் கலெக்டர் அறிவிப்பு**

ஊட்டி

தோட்டக்கலை துறை மூலம் வழங்கப்படும் சலுகைகளை பெற நீலகிரி மாவட்ட விவசாயிகள் விண்ணப்பிக்கலாம் என்று கலெக்டர் சங்கர் தெரிவித்து உள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டு உள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:–

உயர் ரக காய்கறி விதைகள்

நீலகிரி மாவட்ட தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் சார்பில் ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சி இயக்க திட்டம் கடந்த 2005–ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளது.

இதன் ஒரு பகுதியாக உயர்ரக காய்கறி விதைகள் 40 சதவீதம் மானியத்தில் ரூ.2 கோடியே 60 லட்சம் செலவிலும், குருமிளகு நாற்றுகள், இடுபொருட்கள் ரூ.20 லட்சத்திலும், பூண்டு விதைகள் மற்றும் இடுபொருட்கள் ரூ.6 லட்சத்திலும் விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ளது.

இயற்கை விவசாயம்

மேலும் பசுமை குடில்கள் ரூ.46.75 லட்சம் செலவிலும், நிழல்வலை கூடாரம் ரூ.24 லட்சத்து 85 ஆயிரம் செலவிலும் அமைக்க 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. இந்த திட்டத்தில் ஒரு விவசாயி 4 ஆயிரம் சதுரமீட்டர் வரை மானியம் பெற முடியும். எந்திரமயமாக்கல் திட்டத்தின் கீழ் உழவு எந்திரம் வாங்க 25 சதவீத மானியமும், தெளிப்பான்கள் வாங்க 40 சதவீத மானியமும் வழங்கப்படுகிறது.

இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்கும் விதத்தில் மண்புழு உரமேடை, மண்புழு உரபடுக்கை ஆகியவை வாங்க நிதி வழங்கப்படுகிறது. மேலும் மகரந்த சேர்கைக்கு முக்கிய காரணியாக திகழும் தேனீ வளர்ப்பு பெட்டி மற்றும் தேன் எடுக்கும் எந்திரம் ஆகியவை 40 சதவீதம் மானியத்தில் வழங்கப்படும்.

## புதிய தொழில்நுட்பங்கள்

விவசாயத்தில் பல்வேறு புதிய தொழில்நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்படுகிறது. அந்த தொழில்நுட்பங்களை விவசாயிகள் அறிந்து கொள்ளும் விதமாக பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்படுகிறது. நமது மாநிலத்தின் உள்ளே நடக்கும் பயிற்சிகளை பெற ரூ.11 லட்சமும், வெளி மாநிலத்திற்கு சென்று விவசாயிகள் பயிற்சி பெற ரூ.4 லட்சத்து 20 ஆயிரமும் நிதி ஒதுக்கப்பட்டு உள்ளது. மேற்கண்ட திட்டங்கள் அனைத்தும் வருகிற 2016–17–ம் நிதியாண்டில் செயல்படுத்தப்பட உள்ளது. எனவே மேற்கண்ட சலுகைகளை பெற விரும்பும் விவசாயிகள் வட்டார தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் மற்றும் அலுவலர்களை அணுகி விண்ணப்பித்து பயன்பெறலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.